**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 26.11.2024

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வானிலை முன்னெச்சரிக்கை**

வங்காள விரிகுடாவின் தென்பகுதியில் ஏற்பட்டுள்ள மிகக்குறைந்தழுத்த தாழ்வு மண்டலமானது ஆழ்ந்த குறையழுத்த தாழ்வு மண்டலமாக மாற்றமடைந்து வடமேற்காக நகர்ந்து வருவதால் அடுத்த இரண்டு நாட்களுக்கு (26-27.11.2024) காவிரி டெல்டா மண்டல மாவட்டங்களில் கன முதல் மிகக்கன மழை பொழிய வாய்ப்புள்ளது.

**வானிலை சார்ந்த வேளாண் அறிவுரை**

**நெல் பயிர் பொதுவாக வளர் மற்றும் பூக்கும் பருவத்தில் உள்ளது.**

- போதிய வடிகால் வசதி மேற்கொள்ளவும். ஒரு வயலிலிருந்து அடுத்த வயல் வழியாக நீரினை வடிக்க வேண்டாம்.
- நீர்பாசனம், உரமிடல் மற்றும் மருந்து தெளிப்பினை ஒத்திவைக்கவும்.
- மழைநீரினை வடித்தவுடன் வரிசை நடவு செய்த வயல்களில் "கோனோவீடர்" கருவி கொண்டு வேர்பகுதியில் காற்றோட்டம் ஏற்படுத்தவும்.
- மழை நின்றவுடன் நீரினை வடித்த பின் கூடுதலாக 25 சதவீத தழைச்சத்தினை இடுவதால் பயிர் விரைவில் நீர் தேங்கிய பாதிப்பிலிருந்து வெளிவரும்.
- மழைநீரினை வடித்தவுடன் நெற்பயிர்கள் நீர் தேங்குவதால் ஏற்பட்ட பாதிப்பிலிருந்து விடுபட்டு விரைவாக வளர்ச்சி பெற தமிழக வேளாண் பல்கலைக் கழகத்தின் "ரைஸ் புளூம்" என்ற நெல்லிற்கான வளர்ச்சியூக்கியினை இலைவழி தெளிப்பாக ஏக்கருக்கு 2 கிலோ வீதம் 10 நாட்கள் இடைவெளியில் இருமுறை தெளிக்கவும்.
- ஒரு சில இடங்களில் தாமதமாக நடவுசெய்யப்பட்ட குறுவை நெல் அறுவடை தருணத்தில் இருந்தால், மழையினால் பயிர் சாய்ந்து நெல் மணிகளின் முளைப்பினைத் தடுக்க 10 சத சோடியம் குளோரைடு (உப்பு) கரைசலைத் தெளிக்கவும்.

- *மழை நின்றவுடன் நீரினை வடித்த பின் பூஞ்சாணத் தாக்குதலால் பயிர் அழுகல் தென்பட்டால் ஒரு ஏக்கருக்கு 200 மிலி புரபிகுனோசோல் மருந்தினைத் தெளிக்கவும்.*

***காய்கறி பயிர்கள் - வளர் பருவத்தில் உள்ளது.***

- *போதிய வடிகால் வசதி மேற்கொள்ளவும்.*
- *மழை நின்றவுடன் 2.5 கிலோ டிரைகோடெர்மா விரிடியினை 50 கிலோ மணலுடன் கலந்து காய்கறி பயிர்களின் தூர்களுக்கிடையில் இடுவதனால் மண்ணிலிருந்து பரவக்கூடிய நோய்களைத் தவிர்க்கலாம்.*

***!!!!***

**மக்கள் தொடர்பு அலுவலர்**